**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 30.09.2019 ((முற்பகல்)**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 2271/E/2017**

திரு மெ.அழகுராஜன் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 21.11.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 13.01.2017 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 22.03.2017 |

******

**ஆணை**

இன்று (30.09.2019) முற்பகலில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு மெ.அழகுராஜன் ஆஜராகவில்லை. மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்திலிருந்து அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்புக் கடிதமானது 18.09.2019 அன்று சார்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தகவல் ஆணையம்

(மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தான் ஆஜராகாதது குறித்து ஆணையத்திற்கு எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை. இதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி நா.உஷாராணி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 21.11.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் ப.மு.எண்.9064/2008(அ2), நாள் 25.05.2008 திரு மெய்யப்பன் (எ) சின்னக்கருப்பன், திருமதி காந்திமதி ஆகிய தனது தாய் தந்தையரின் வாரிசுச் சான்றிதழின் சான்றிட்ட நகலைத் தகவலாகக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 16.12.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேற்படி கோப்பு பதிவறையில் தேடி எடுத்து விரைவில் வாரிசுச் சான்று நகல் வழங்கப்படுமெனப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 13.01.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவானது 20.01.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவல் கிடைக்க ஆவன செய்யுமாறும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 22.03.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (30.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், இதே தகவலைக் கோரி மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள பிறிதொரு மனு தொடர்பான வழக்கு ஏற்கெனவே ஆணையத்தால் 07.02.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மேல்முறையீட்டாளர் கோரிய தகவலை ஆணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் வழங்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளதாகவும், ஆணையத்தின் உத்திரவின் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு மேற்படி வாரிசுச் சான்று 15.02.2019 அன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

5. பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட அவணங்களைப் பரிசீலனை செய்கையில், ஒரே தகவலைக் கோரி இரு வெவ்வேறு மனுக்கள் தாக்கல் செய்துள்ளதும், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளதும், மேல்முறையீட்டாளரும் "**நகல் பெற்றுக்கொண்டேன்**" என எழுதிக் கையொப்பமிட்டுள்ளதும் தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளருக்குப் பொதுத் தகவல் அலுவலரால் உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதென்பதை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 2271/E/2017</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு மெ.அழகுராஜன்,
த/பெ. மெய்யப்பன் (எ) சின்னக்கருப்பன்,
எண்.42, கீழத் தெரு,
கண்டனூர் ரோடு,
காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.

Copy to: Judgement File.
04/10/19